# BIBLE DOCTRINES.

[An amplification of the decalogue and of some of the other principal doctrines of the Bible, concluding with an exhortation to professing Christians.]

# வேதசாரம்.

பிதாக் குமாரன் பரிசுத்தாவியென்னும் மூ
வருமொன்றான கடவுள் ஆதியந்தமில்லாமல்
அரூபியாய் எங்கும் வியாபித்திருந்து அளவில்
லாத வல்லமை அளவில்லாத ஞானம் அளவில்
லாத கிருபையுள்ளவராய் எல்லாரையும் எல்லா
வற்றையும் உண்டாக்கி நடத்திக் காப்பாற்றி வ
ருகிறாரென்பதும் அவரை மனதினாலே தியா
னித்து வணங்குவதேயன்றி அவருக்குப் பாவ
னையாக விக்கிரகத்தை வைத்து வணங்கப்படா
தென்பதும் அவரையேயன்றி வேறு தேவர்க
ளையானாலும் மனிதர்களையானாலும் வணங்கலா
காதென்பதும் நமது ஆதிபிதா மாதாவான ஆ
தாமும் ஏவாளும் பராபரனிட்ட கட்டளையை
த் தவறி நடந்ததினாலே அவர்களும் அவர்கள்
பின்னடியாராகிய மனிதரெல்லாரும் படவே
ண்டிய ஆக்கினைக்குத் தப்பிக்கொள்ள இடமில்
லாதிருக்கிறதைப் பராபரன் கண்டு அவர்கள்
மேல் இரங்கித் தம்முடைய குமாரனை அவர்க
ளுக்கு இரட்சகராக அனுப்புவோமென்று

2d. Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [5,000
1844.

வாக்குத்தத்தம்பண்ணி அந்த இரட்சகர் மனிதனாகப்பிறந்து பாவ நிவிர்த்திபண்ணும்படி தம்மைத்தாமே பலியிடுவாரென்கிற அதற்கடையாளமாக மிருகங்களைப் பலியிடவேண்டுமென்று கட்டளையிட்டாரென்பதும் அவர் இன்ன காலத்திலே இன்னவிடத்திலே பிறப்பாரென்பதும் இப்படி நடக்கப்போகிற காரியங்களையுந் தீர்க்கதரிசிகள் மூலமாக முன்னறிவித்தாரென்பதும் ஆதாம் முதற்கொண்டு கிறிஸ்துநாதர் வருமட்டாக இருந்தவர்களில் தெய்வபத்தியுள்ளவர்கள் எல்லாரும் இரட்சகராகிய மேசியா வருவாரென்பதை விசுவாசித்து அவர் பாடுபட்டுத் தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுப்பதற்கு அடையாளமாக மிருகப் பலிகளைச் செலுத்தி அப்படியே பாவமன்னிப்பைப் பெற்று நரகத்துக்குத் தப்பி இரட்சிக்கப்பட்டார்களென்பதும் பின்பு பராபரன் குறித்த காலத்திலே அந்த இரட்சகர் பரிசுத்த ஆவியினாலே ஒரு கன்னியிடத்தில் உற்பவித்துப் பிறந்து தெய்வீகமும் மனுஷீகமும் உடையவராய் இயேசுக்கிறிஸ்துவென்னும் நாமமுஞ் சூட்டப்பட்டுப் பலபல அற்புதங்களைச் செய்து தம்மை இரட்சகரென்று வெளிப்படுத்தி மனிதருடைய ஆத்துமா மோட்ச கரையேறத்தக்கதான போதகத்தைப் போதித்துப் பராபரனுக்கும் மனிதருக்குஞ் சமாதானமுண்டாகும்படி சிலுவைமரத்தில் அறையுண்டு இப்படியே நம்மேல் வரும் ஆக்கினையைத் தாமே பட்டனுபவித்து மரித்து மூன்றுநாள் உயிர்த்தெழுந்து தம்முடைய சீஷரிடத்தில் எல்லாருக்கும் இந்தச்

சுவிசேஷத்தை அறிவியுங்களென்று கட்டளையி
ட்டுப்பரமண்டலத்துக்குள்எழுந்தருளித் தம்மை
விசுவாசிக்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியின்
வரங்கள் முதலான நன்மைகளைக் கொடுக்கும்
படியாகப் பிதாவைப் பார்த்து மன்றாடுகிறார்
என்பதும் அவர் மனிதருடைய பாவத்துக்குத்
தக்க இடுபண்ணினதினால் அவர் வழியாய் எவ
ரும் நித்திய ஆக்கினைக்குத் தப்பி ஈடேற்றம்
பெறுகிறதற்கு இடமுண்டாயிருந்துஞ் சுபா
வக்குணத்தின்படியே அவரை ஏற்றுக்கொள்
ளாமல் விட்டுவிட்டவர்கள் தவிர அவரை ஏற்
றுக்கொண்ட எல்லாருக்குந் தமது பரிசுத்த
ஆவியை ஈந்தருளி அவர்கள் தங்கள் பாவங்களை
க் குறித்து உணரவும் மனஸ்தாபப்படவும் அ
வைகளை விட்டுவிடவும் வகைசெய்வதுமன்றித்
தமது பொருட்டாக அவர்கள் குற்றமற்றவர்
களாகி இவ்வுலகத்திலே தங்களுக்கு வேண்டிய
நன்மைகளையும் மறுலோகத்திலே மோட்ச க
தியையும் பெற்றுக்கொள்ளப் பண்ணுவாரெ
ன்பதும் அவர் வந்து பாவ நிவாரணம் உண்டு
பண்ணும்படி பாடுபட்டு மரித்து மூன்று
நாள் உயிர்த்தெழுந்து நமக்கு இரட்சகரானா
ரென்பதை விசுவாசிக்கிறவர்கள் மோட்சத்தை
யும் அவர் இரட்சகரென்பதை அறிந்தும் விசு
வாசியாதவர்கள் நரகத்தையும் அடைவார்களெ
ன்பதும் பராபரன் இட்ட கட்டளைப்படி கு
ணப்பட்டுக் கிறிஸ்துவின்மேல் விசுவாசிக்கிற
வர்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றுத்
திருச்சபையிலே சேர்ந்து திருவிருந்தை அனு
பவிக்கிறவர்களுமாய் அப்படியே மற்றெல்லா

க்காரியத்திலும் அவரைப் பின்பற்றுகிறவர்களு
மாய் இருக்கவேண்டுமென்பதும் உலக முடி
விலே இயேசுக்கிறிஸ்து மகிமையோடே வந்
து செத்தவர்களை எழுப்பி உயிரோடிருப்பவர்
களை மறுரூபமாக்கி எல்லாரையும் அவரவர்க
ள் செய்கையின்படியே நியாயந்தீர்த்துக் கு
ணப்பட்டவர்களை மோட்சத்திலே சேர்த்துக்
கொண்டு குணப்படாதவர்களை நரகத்திலே த
ள்ளிப்போடுவாரென்பதும் இத்தொடக்கத்தி
ன் பிறகும் சத்தியவேதத்திலே தெளிவாய் வெ
ளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதுவுமன்றிக் கிறிஸ்துநாதரை இரட்சகரா
க ஏற்றுக்கொண்டு குணப்பட்டவர்கள்,

முதலாவது, சகலவிதமான விக்கிரக ஆராத
னையை விட்டுவிடுகிறதுமல்லாமல் உரோமை
மார்க்கத்தார் வணங்கிவருகிற சுத்தவாளரை எ
ன்கிலுந் தமிழர் வணங்குகிற தேவர்களையெ
ன்கிலும் வணங்காமலும் அவர்களை மேன்மை
யாக எண்ணாமலும் அவர்களுக்கு ஆராதனைசெ
ய்யாமலும் அவர்கள் கோவில்களுக்குப் போ
காமலும் அவர்களுக்கு இயாதொரு நேர்த்தி
பண்ணாமலும் வேறியாதொன்றை அவர்களுக்
குக் காணிக்கையாகக் கொடாமலும் அங்கே
கொடுக்கிற விபூதி முதலிய பொருள்களை வாங்
கி அணியாமலும் விவாகஞ்செய்யும்பொழுதா
வது மரணம் அடையும்பொழுதாவது பிள்ளை
ப்பேற்றிலாவது வேளாண்மைத் தொழிலா
வது வியாபாரம் முதலிய யாதொரு வேலையை
த் தொடங்கும்பொழுதாவது தமிழர் செய்யு
ஞ் சடங்குகளைச் செய்யாமலும் மந்திர தந்திர

வித்தை பண்ணாமலும் அவைகளுக்கு உடன்படாமலும் நல்லநாள் தீயநாட் பாராமலுஞ் சூனியஞ்செய்யாமலும் விழி விசேஷங் கை விசேஷம் நிமித்தசாத்திரம் இவைகளைப் பாராமலும் விட்டுவிடவேண்டுமென்றும்,

இரண்டாவது, அவர்கள் ஒருத்தரோடொருத்தர் கொண்டாட்டம் பண்ணிக்கொள்ளும்பொழுது சாதிவித்தியாசம் பாராமல் எல்லாரையும். ஒரு சரியாக எண்ணி நடந்து இராசாக்களையுங் கனத்திலேயும் உத்தியோகத்திலேயும் மேலானவர்களையும் தங்களோடொத்தவர்களையுந் தங்களுக்குக் கீழானவர்களையும் பேணி அவர் அவர்கள் இயல்புக்குத் தக்கதாக மதித்துத் தாழ்மையோடும் பொறுமையோடும் நடக்கவேண்டுமென்றும்,

மூன்றாவது, பராபரனுடைய நாமத்தை வீணிலே எடுத்துச் சொல்லாமலும் பொய்ச்சத்தியம்பண்ணாமலும் வீண் வார்த்தைகளைப் பேசாமலும் வேதவாக்கியங்களை அற்பமாகப் பாவியாமலும் இருக்கவேண்டுமென்றும்,

நான்காவது, ஒய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டுமென்கிற கவனத்துடனே மருந்து கொடுக்கிறதும் புசிக்கவேண்டிய போசனத்தைச் சமைக்கிறதும் மறுநாளளவும் பொறுக்கமாட்டாமற் சீவபிராணிகள் வருந்துமேயாகில் அவைகளுக்கு உதவிசெய்கிறதுஞ் சுவிசேஷத்தைக் கேட்கிறதும் அதைப் போதிக்கிறதும் பின்னும் இவ்விதமான தேவாராதனைக்கடுத்த முயற்சியாகவேயல்லாமல் மனிதர் தாங்களாகிலுந் தங்கள் பணிவிடைகாரராகிலும்

யிருகங்களாகிலும் அந்த நாளிலே வேலை செய்யாதபடிக்கு முதனாளிலே அந்த நாளுக்கு வேண்டியவைகளைத் தேடி ஆயத்தம்பண்ணிக் கொள்ளுகிறதுமன்றித் தாங்களுந் தங்கள் சமுசாரத்திலுள்ளவர்களும் இயாதொரு உலக வேலையைச் செய்யாமலும் உலக காரியங்களைப் பேசாமலும் அவைகளை விரும்பாமலுங் கொள்வனவு விற்பனவு பிரயாணம் பண்ணுதல் இவைகளையெல்லாம் விட்டுத் தேவவசனத்தை வாசித்துங் கேட்டும் அதை எடுத்துப்பேசியும் ஆத்துமகாரியங்களையும் மோட்சகாரியங்களையுந் தியானித்துக் கோவிலுக்குப்போய்த் தேவாராதனை பண்ணித் தங்கள் சமுசார கூட்டத்துடனேயுந் தனியேயுங் கத்தரவை வேண்டுதல் செய்து இவ்விதமாய் ஆசரிக்கவேண்டுமென்றும்,

ஐந்தாவது, பிள்ளைகளாயிருக்கிறவர்கள் பிதா மாதாவுக்கு அமைந்து அவர்களை மேன்மைப்படுத்துகிறதுமல்லாமல் தளர்ந்தகாலத்தில் அவர்களைத் தாங்கவும் பிதா மாதாவோ அவர்களைப் பட்சமாய் நடத்தவும் பணிவிடைகாரர் தங்கள் எசமான்களுக்கு அமைந்து அவர்களை மேன்மைப்படுத்தி நடக்கவும் மனைவிகள் தங்கள் மணவாளருக்கு அமைந்து நடக்கவும் மணவாளர் தங்கள் மனைவிகளைப் பட்சமாய் நடத்தவும் இராசாக்களுக்கும் பெரியோர்களுக்குங் கீழ்ப்படிந்து மற்றுள்ள யாவரோடுஞ் சமாதானமும் பட்சமும் உள்ளவர்களாயிருக்கவும் வேண்டுமென்றும்,

ஆறுவது, தன்னைத்தானாகிலும் பிறரையாகி

லுங் சொல்லப்படாதென்றும் இயாதொரு பி ரதானமான முகாந்திரமின்றி விளையாட்டுக்கா கிலும் வைராக்கியத்தினுலாகிலுங் கொல்லப்ப டாதென்றுந் தங்கள் பிள்ளைகளையாகிலும் ஆ டு மாடுகளையாகிலும் இறந்துபோகத் தக்கதா கப் பராபரிப்புத் தாழ்ச்சியாய் விடப்படாதெ ன்றுங் கருக்கொள்ளாதபடியென்கிலுங் கருவ ழிந்து போகும்படியென்கிலுஞ் செய்யப்ப டாதென்றும் பிரதான நியாயமில்லாமல் மனி தரையாவது மிருகங்களையாவது பட்சிகளையா வது வருத்தப் படுத்தப்படாதென்றும் வெறி பெருந்தீன் கோபம் பகை பொருமை வைரா க்கியம் சண்டை சிறியோரை நெருக்குதல் மு தலான தீமையுள்ளவர்களாயிருக்கப் படாதெ ன்றும்,

ஏழாவது, விபசாரஞ் செய்யாமலும் அசப் பியம் பேசாமலும் காமாதுரத்தை எழுப்புகிற கவிகளைக் கல்லாமலும் கேளாமலும் காமாது ராருடைய கூட்டத்திற் சேராமலும் கூத்து மு தலிய விளையாட்டுகளிற் போகாமலும் விட்டு ஒவ்வொருவரும் இல்லரச்சிரம நெறி தவரும ல் ஒரே மணவாளனுக்கு ஒரே மனையாட்டியு ம் ஒரே மனையாட்டிக்கு ஒரே மணவாளனுமா க இருவரும் ஒருமித்து அன்பாய்க் கூடியிரு க்கவும் அப்படிக்கூடியபின் விபசார நிமித்தம ன்றி வேருெரு நிமித்தமாக ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியப்படாதென்றும் இரத்தக் கலப் பான கிட்டின உறவு முறையாருக்குள்ளும் அ ன்னியசம்பத்தாருக்குள்ளும் விவாகம்பண்ண க்கூடாதென்றும்,

எட்டாவது, களவுசெய்யவுங் களவுக்குத் து
ணைசெய்யவுங் களவினாலே வந்த பொருளை வா
ங்கவுங் கொள்வனவு விற்பனவிலே பொய் சொ
ல்லவும் நிறையிலே அல்லது அளவிலே சோர
ம்பண்ணவும் கைக்கூலியாவது அநீத வட்டியா
வது வாங்கவுங் கள்ள உறுதிகள் செய்யவுங் க
ள்ள வழக்குத் தொடுக்கவுஞ் சூது முதலிய
தொழில்கள் பண்ணவுந் தீர்வைகொடாமற் க
ள்ளச் சரக்கு ஏற்றவும் மனம் இணங்கப்படா
தென்றும்,

ஒன்பதாவது, பொய்ச்சாட்சிசொல்லவுந் தி
ருச்சபையிற் சேர்ந்திருக்கிறவர்கள் ஒருவரோ
டொருவர் வழக்காடவும் நிசமறியாத யாதொ
ன்றை நிசப்படுத்திப்பேசவுங் கோட்சொல்ல
வுங் குறளைபேசவும் தூஷணம்பண்ணவுந் தகா
தென்றும்,

பத்தாவது, பிறருடைய பொருளுக்கு ஆ
சைப்படவும் அதைக் கண்டு பொறாமை கொ
ள்ளவும் வேண்டாமென்றும் ஒவ்வொருவருந் த
ம் தன் நிலையிலே தனக்குத் தனக்கு உள்ளது
போதுமென்று நினைத்துப் பொறுமையாய்
இருக்கவேண்டுமென்றும்,

பதினொராவது, பொல்லாங்கைச் செய்யா
மல் விடுவதுமாத்திரமல்ல எப்பொழுதும் வி
யாதிக்காரருக்குந் தரித்திரருக்கும் உதவிசெய்
து பிள்ளைகளும் அயலவர்களுஞ் சிநேகிதர் ம
ற்றுள்ளவர்களுந் தேவபத்தியுள்ளவர்களாய் ந
டக்கவேண்டுமென்கிற விருப்பத்தோடே அவ
ர்களுக்குப் புத்திசொல்லி வேதவாக்கியங்களை
அறிவித்து அவர்களுக்காகக் கருத்தாவை வே

ண்டுதல்பண்ணி இப்படியே பராபரனுடைய
மகிமை விளங்கும்படியாகவுங் கிறிஸ்துமார்க்க
ம் பரம்பும்படியாகவும் வாஞ்சையுள்ளவர்களா
ய்ச் சகலமனிதருக்கும் ஒரு முன் மாதிரியைக்
காட்டி அவர்களுக்குள்ளே வெளிச்சத்தைப்
போலப் பிரகாசமாய் நடக்கவேண்டுமென்று
ம் வேதவசனத்தினாலே விளங்கும்.

கிறிஸ்தவர்கள் கைக்கொண்டு நடக்கவேண்
டிய வேதப்பிரமாண ஒழுங்குகளை இங்கே வா
சித்துக்கண்டீர்கள். இவைகளெல்லாவற்றையு
ம் மெய்யான கிறிஸ்தவர்கள் கைக்கொண்டு பி
ரபஞ்சத்தைப் பற்றினவர்கள் போல இருந்தா
லும் உள்ளே பற்றாதவர்களாயும் அதிலே யா
தொரு மகிமையில்லையென்று கண்டவர்களாயு
ம் அதின் அனுபவத்திலே யாதொரு திருத்தியி
ல்லையென்று தேர்ந்தவர்களாயுந் தங்கள் சரீர
முந் தங்கள் பக்கல் மனையாட்டி முதலானவர்
களும் தாங்கள் அனுபவிக்கிற செல்வமுந் தங்
களுடையதல்லப் பராபரனுடையதென்றும் ப
ராபரன் அதைத் தங்களுக்குக் கொடுக்கச் சித்
தமாகில் கொடுப்பார். கொடாமல்விடச்சித்த
மாகில் விடுவார். கொடுத்ததையும் மறுபடி
எடுக்கச் சித்தமாகில் எடுப்பாரென்கிற நம்பிக்
கையையுடையவர்களாயும் பராபரனுக்கும் ம
னிதருக்கும் பிரியமானவைகளைச் செய்வதே த
ங்கள் கடமையென்றும் எண்ணி நடப்பார்கள்.
கிறிஸ்துநாதரை நம்பாதவர்களுடைய நடக்கை
யோ உலகத் தானாக அவர்களை விட்டுப்போனா
லும் அவர்கள் அதை விடாமல் மிகுந்த வாஞ்
சையுடனே தாவித்தாவிப் பிடிக்கிறவர்களாய்

இருக்கிறார்கள். எப்படியெனில் ஒருவருக்கு
வியாதி வரும்பொழுது அது என்னுடைய பா
வத்தினிமித்தமல்லவா வந்ததென்றெண்ணிப்
பாவத்துக்கான மனஸ்தாபத்துடனே குணப்
பட்டுப் பராபரனிடத்திற் சேருகிறதை விட்டு
அந்தந்தத் தெய்வத்தின் குறைபாட்டினால் ந
மக்கு இப்படியும் அப்படியுஞ் சம்பவித்ததெ
ன்று வீண் புலாதிகொண்டு தங்கள் பொருட்க
ளைச் செலவழித்து வேண்டிக்கொள்ளுகிறார்க
ள். அந்த வேண்டுதலினாலே பலனில்லாமற்
போம்பொழுது அவைகளைத் தூஷணித்துப்
பகைத்துப் பொல்லாங்காய்ப் பேசி நிந்திக்கி
றார்கள். இனி ஒருவர் சாகும்பொழுது தங்க
ள் தலையிலே மார்பிலே வயிற்றிலே முகத்திலே
கன்ணிலே அடித்துத் தலையின் மயிரைப் பிடு
ங்கிப் புழுதியிலே விழுந்து புரண்டு என் பிறப்
பே என்னுயிரே என் கண்ணே என்று இப்ப
டிப் பலவீண்வார்த்தைகளைச் சொல்லி அழுது
கூக்குரலிடுகிறார்கள். யாதொரு பொருள் நட்
டம்போம்பொழுதும் அவ்விதமாகவே செய்
துபட்டினிகிடந்து பழிபோடுகிறார்கள். வேறு
அனேகர் பொருள் நிமித்தமாகப் பொய் சொ
ல்லிக் களவெடுக்கிறார்கள். வேறு அனேகர் கள்
ள உறுதிகளை எழுதிக் கள்ள வழக்குகளைத் தொ
டுக்கிறார்கள். சிலவேளைகளிலே கன திரவியம்
வருகிறதற்கு வழிவகை உண்டேயென்னில் ஒரு
கோழிக்குஞ்சைத் திருகுவதுபோல அகப்பட்
ட பேர்களைக் கொன்றும் போடுவார்கள். இவ்
வளவுமாத்திரமல்ல பணவாசை சிற்றின்பவா
சை என்னும் இரண்டுபேயும் உட்பட்டுக்கொ

ள்வதினாலே தங்கள் ஜீவனின் அருமையையும் மறந்துபோகிறார்கள். இப்படியெல்லாஞ் செய்கிறதினாலே அவர்கள் இவ்வுலகத்திலேயாகிலும் மறு உலகத்திலேயாகிலும் ஈடேறுகிறதற்கு ஒரு நம்பிக்கையும் உண்டாயிராது. இப்படி நம்பிக்கையற்றுப்போகிற காலத்திலே மிகுந்த பாரமான துக்கம் அவர்கள் மனதிலே வந்து தலைப்படும்.

பிரியமானவர்களே கிறிஸ்தவர்களாகிய எங்களுடைய நம்பிக்கை கர்த்தாவின்மேலும் மறுலோகவாழ்வின்மேலும் இருக்கையால் இவ்வுலகத்தில் என்ன நட்டம் வந்தாலும் அதினிமித்தம் அடங்காத கவலைகொள்ளாமலும் என்ன நயம் வந்தாலும் அதினிமித்தம் அதிகமகிழ்ச்சி கொண்டாடாமலும் இருக்கிறோம். கிறிஸ்துமார்க்கத்தாராயிருக்கிறவர்களில் இந்தப் பிரமாணத்தின்படி நடப்போமென்று சொல்லிப் பின்பு நடவாமலிருக்கிறவர்களும் உண்டு. ஆகிலும் அவர்கள் நிமித்தமாக மற்றவர்களையும் வேதத்தையும் வேதப்பொருளாகிய கடவுளையும் நிந்திக்கிறது நியாயமோ? அல்லவென்று அவர்கள் செய்த குற்றங்களை எடுத்துச் சொல்வதினால் உங்கள் பாவந் தொலையுமோ? வேதத்தில் அடங்கிய இந்தக் கற்பனையின்படி நடக்கிற நடக்கையினாலே உலோகத்திலிருக்கிற யாதொருவருக்கு நட்டம் வருகிறதில்லை. நட்டம் வராதிருக்கிறதுமாத்திரமல்ல உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நல்ல கல்விகளையும் மேன்மையான உத்தியோகத்தையும் மற்றுஞ் சகல வித நன்மைகளையும் எங்களை நடத்துகிற வேத ஒ

ழுங்குதானே வருவிக்கின்றது. அன்றியும் உங்களுக்குப் பொருள் நட்டமாகிலுஞ் சரீர நட்டமாகிலுஞ் சம்பவிக்கும்பொழுது யாதொரு ஆறுதலில்லாமற் போகிறபடியினாலே மறுமைப்பொருளாகிய மோட்ச வாழ்வை நீங்கள் இம்மையிலே காத்திருக்கவில்லையென்றும் அதினாலே உங்களுக்கு மறுமையிலே ஆறுதலடைய இடமில்லையென்றும் விளங்குகின்றது. அப்படி இம்மையிலே ஆறுதலடையாதிருப்பது பெரிய காரியமல்ல, மறுமையிலே ஆறுதலடையாதிருப்பதோ உங்களை நரக வேதனைக்கு உட்படுத்துவதாகவே இருக்கின்றது. ஆதலாற் பரம குருவாகிய கிறிஸ்து நாதராலே கொடுக்கப்பட்டதாயும் உலகத்துக்கு இம்மையிலும் மறுமையிலும் ஆறுதலைத் தருவதாயும் இருக்கிற மெய் வேதத்தை உறுதியாய்ப் பற்றி நடப்பீர்களாக.

---

முற்றிற்று.